REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: சித்திரை 29உ வியாழன் (12—5—55) ★ ★ வெளியூர்: சித்திரை 30உ வெள்ளி (13—5—55) [இதழ் 283

அடுத்த பொதுத் தேர்தல்

1957-ல் நடைபெறும்

ஸ்ரீநகர், மே 10—

19‍57-ம் ஆண்டு ஜனவரி—பிப்ரவரி மாதங்களில் இந்தியாவின் பொதுத் தேர்தலை நடத்த வேண்டுமென்று பிரதம தேர்தல் அதிகாரி. சுகுமார் சென் தலைமையில் நடைபெற்றுவரும் தேர்தல் அதிகாரிகள் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம்.

தமிழருக்கு எதிராக இந்தி வெறியர் வக்கரிப்பு!

'திராவிடத் தொழிலாளர்கள் கிள்ளுக்கீரையா?'

'நமக்குக் கிடைத்திருப்பது 'மாதிரி' சுதந்திரமே!'

'மந்திரிகளும் 'மாதிரி'கள்தான்!'

புதுவை மே தின விழாவில் என். வி. நடராசன் இலட்சியப் பரணி.

"சுதந்திர ஆட்சியில் தொழிலாளர் இயக்கமென்றாலே அல்லது கிளர்ச்சிகள் என்றாலோ சர்க்காரால் 'கிள்ளுக்கீரை'யாக மதிக்கப்படுகிறது. இந்தக் கேடுகெட்ட நிலைக்கு யார் யார் அல்லது எந்தெந்தக் கட்சிகள் காரணம் என்பதை விவரிக்கத் தேவையில்லை."

"தேசியப் போராட்டத்தில், எந்தத் தொழிலாளர் இயக்கத்தின் சக்தி பெரும் துணை புரிந்ததோ, அத்தொழிலாளர்கள்தான் இன்று தேசியத்தாரின் குடியரசு ஆட்சியிலே தொல்லைப் படுகின்றனர்;—அதிலும் குறிப்பாக, தென்னாட்டுத் தொழிலாளர்கள் தொல்லைப்படுவது மட்டுமல்லாமல், அவர்களின் வாழ்வு, நாளுக்கு நாள் தேய்ந்துகொண்டே வருகிறது."

"பரூக் மன்னனின் காலடியில் மிதிக்கப்பட்டுவந்த எகிப்திய நாட்டிலே, 1953-ம் ஆண்டுதான் குடியரசு பிரகடனம் செய்யப்பட்டது. இன்று அந்த நாட்டில் 6 இலட்சத்து 20 ஆயிரம் ஏக்கர் நிலங்களைச் சர்க்கார் பொதுச் சொத்தாக்கி, உழைப்பாளிகளின் ஏழ்மையைப் போக்கியிருக்கிறது. இது போன்றே சின்னஞ்சிறு நாடுகள் அனைத்தும் இன்று உரிமை பெற்று வாழ்வது மட்டுமல்லாமல், உலக அரசியல் அரங்கிலே இடம் பெற்றுமிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? அவையனைத்துக்கும் கிடைத்த உண்மையான சுதந்திரமேயாகும்; ஆனால், திராவிடத்துக்குக் கிடைத்திருப்பதோ 'மாதிரி' சுயராஜ்யம்! திராவிட மந்திரிகளோ 'மாதிரி' மந்திரிகள்! எல்லாம் 'மாதிரி' மயம்தான்!'

—இவ்வாறு, 8—5—55 மாலை, புதுவை தி. மு கழகச் சார்பில், புதுவை ஒதியஞ்சாலை மைதானத்தில், தோழர் சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற மே தின விழாப் பொதுக்கூட்டத்தில், தோழர் என். வி. நடராசன் அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"தென்னாட்டைப் பொறுத்தவரையில் மே தினத்தைக் கொண்டாட முழு தகுதியும் உடையவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்பதை நாங்கள் கூறுவதைவிட, இந்நாட்டு அரசியல் வரலாற்றினையும், குறிப்பாகத் தொழிலாளர் இயக்க விவரங்களையும் அறிந்தவர்கள் ஒப்புக்கொள்ளத்தான் செய்வர்.

"ஏறத்தாழ 69 ஆண்டுகளுக்கு முன் சிகாகோ நகரில், வேலை நேர நிர்ணய உரிமைக்குப் போராடிய வீரர்களின் மார்பை அடக்குமுறை வெறியாட்டம் தனது கோரச் செய்கைகளினால் துளைத்துக் கொடுமை படுத்திய நாள்தான் இம் மேதினமாகும்; அன்றுவரை உலகின் எந்தப்பாகங்களிலுமிருந்த தொழிலாளர்கள், வேலைநேர நிர்ணயமின்றி, நாள் ஒன்றுக்கு 20 மணி நேரம் கூட உழைத்துவந்தனர்—என்—கூப்பிட்ட குரலுக்கு குனிந்து கொடுத்து, கும்பிடு போட்டு, மாடுபோல உழைக்கும் அவல-நிலையில், தொழிலாளர்கள் முதலாளிகளால் கொடுமைப்படுத்தப்பட்டு வந்தனர்; அக்கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைத்து, வேலை நேரத்தை நிர்ணயம் செய்ய எடுத்துக்கொண்ட முயற்சியின் வெற்றியை மேநாள் மேதினியெங்கும் நினைவூட்டி வருகிறது

"இத்தகைய மகத்தான உரிமை நாளை தமிழகத்தில் முதன் முதல் கொண்டாடியது மட்டுமல்லாமல், அந்நாளின் கொள்கைகளை இந்நாட்டுப் பாட்டாளி மக்களிடையே எடுத்துக் கூறியது சுயமரியாதை இயக்கம்தான் என்பதை அரசியல் ஞானம் படைத்தவர்கள்—அரசியலில் ஓரளவாவது நேர்மைக் குணம் படைத்தவர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்குண்டு; எனவே, சுயமரியாதை இயக்கத்தின் ஒழுங்குமுறையான வளர்ச்சியை தலைசிமிர்ந்து எடுத்துக்காட்டும் மகத்தான சக்தியாய் விளங்கிவரும் திராவிட முன்னேற்றக் கழகம் மே தின விழாவைத் தொடர்ந்து கொண்டாடுவதில், அறிவும், அரசியல் தொடர்பும் நிரம்பியிருக்கிறதென்பதை அறியாதார், 'யாதும் அறியாதார்' பட்டியலில்தான் சேர்க்கப்படுவார்கள்.

"மேலைநாட்டில் வேலைநேர நிர்ணய உரிமைக்காகப் போராடிய அக்கொள்கையை திராவிடத்தில் முதன் முதலாக வலியுறுத்திப் பேசியதுடன், அன்றைய பிரிட்டிஷ் ஆட்சியினரை வற்புறுத்தி ஆவன செய்யவேண்டுமென்று கூறியவர், திராவிட இயக்கத் தலைவரேயாகும்—அதாவது பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைத் தோற்றுவித்த தலைவர்களிலொருவரான டாக்டர் டி. எம். நாயர் அவர்களாகும் அன்றைய இந்தியசர்க்காரால் அனுப்பப்பட்ட 'பாக்டரி குழு'விடம் தொழிலாளர்களின் அவல நிலையை விவரித்துக் கூறி, 'குறைந்த பட்சம் 9 மணி நேரமாகவாவது முதலில் நிர்ணயம் செய்தால் போதும்' என்று வாதாடினார், டாக்டர் நாயர். அவரின் பெருமுயற்சியாலும், பார்ப்பனரல்லாத இயக்கத்தின் மற்ற தலைவர்களின் ஒத்துழைப்பினாலும் இக்கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

'இந்தியத் துணைக் கண்டத்தில், முதன் முதலாக, அமைப்பு முறையுடன் கூடிய தொழிற் சங்கம் திராவிடத்தின் தலைநகரான சென்னையில்தான் நிறுவப்பட்டது; 1917-ம் ஆண்டு, அச்சங்கம், மறைந்த தமிழ்ப் பெரியார்—தொழிலாளர் தலைவர் திரு. வி. கல்யாணசுந்தரனார் அவர்களால் நிறுவப்பட்டது; பிறகுதான், இந்தியாவின் பல பாகங்களிலும் தொழிற் சங்கங்கள் நிறுவப்பட்டு, 'அனைத்திந்திய தொழிற் சங்கம்' என்ற அணைப்பில் ஒன்று திரண்டது; எனவே, இந்தியாவில்—முதன் முதலாக சென்னையில்—நிறுவப்பட்ட தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சிக்கும், தொழிலாளரின் உரிமைக்கும் கூடுமானவரை ஒத்துழைப்புத் தந்து அக்கரை செலுத்தியவர்கள் பார்ப்பனரல்லாதார் இயக்கத் தலைவர்களான சர். தியாகராயர், டாக்டர் சி நடேசனார் என்பதை, தொழிலாளர் இயக்கத் தலைவர் கல்யாணசுந்தரனார் வரைந்துள்ள 'தொழிலாளர் இயக்க வரலாறு' எடுத்துக் காட்டும்.

"திரு. வி. கல்யாணசுந்தரனார் போன்ற தொழிலாளர் தலைவர்

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தி எதிர்ப்பை ஒழிக்க ஆங்கிலத்தின் மீது போர்!

வட இந்தியாவில் ஆங்கிலத்தை அகற்றப் புதிய ஏற்பாடு

புதுடில்லி, மே 11—

இந்தித் திணிப்புப் பிரச்சினையில் தென்னிந்திய அரசியல் வாதிகள் கொண்டுள்ள நகர்ந்து செல்லும் மனப்போக்கை எதிர்க்கும் வகையில், ஆங்கில மொழியை வட இந்தியாவிலிருந்து அகற்றிவிடுவது என, இந்தி வெறி கொண்ட மக்கள் சபை உறுப்பினர்கள் திட்டம் ஒன்றைத் தீட்டியுள்ளதாகத் தெரியவருகிறது.

இத்தகவலை, சென்னை 'மெயில்' இதழுக்கு அதன் டில்லி நிருபர் தந்துள்ளார்.

'மக்கள் சபையின் வரவு-செலவு கூட்டம் முடிந்து, தங்கள் தங்கள் ஊருக்குத் திரும்புவதற்கு முன்பாக, செல்வாக்கு மிக்க இந்தி மொழி உறுப்பினர்கள் கலந்து பேசி மேற்கண்ட முடிவுக்கு வந்துள்ளதாகத் தெரிகிறது.

ஆட்சி மொழி என்ற முறையில் இந்தி வழக்கை விரிவுபடுத்துவதில், பொதுவாக இந்தி பேசாத மக்களிடத்திருந்தும், குறிப்பாகத் தென்னிந்திய மக்களிடத்திருந்தும் ஏற்படும் எதிர்ப்பு கண்டு தாங்கள் வருந்துவதாகவும், அவர்களுடைய எதிர்ப்பு மனப்போக்கை மாற்றிக்கொள்ளும் வகையில், மேற்குறிப்பிட்டுள்ள சாத்திய செயல் முறையை மேற்கொள்ளுவது எனவும் இந்தி உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளதாக நம்பப்படுகிறது

அதிகாரபூர்வமாகவும், சட்டபூர்வமாகவும் இந்திமொழி பேசாதவர்களிடை இந்தி மொழியை வலுக்கட்டாயமாகத் திணிக்க எடுக்கும் முயற்சியைத் தவிர்த்து, 'தங்களைத் தாங்களே கவனித்துக்கொள்ளும்'படி இந்தி பேசாதவர்களை விட்டுவிடுவது என்பது குறித்தும், அதே நேரத்தில், பேச்சு மொழியாக இந்தி வழங்கப்படும் மாநிலங்களில், ஆங்கிலத்தை அறவே விலக்கிவிட்டு, இந்தி வழக்கை உடனடியாக விரிவுபடுத்துவது பற்றியும், அந்த இந்தி உறுப்பினர்கள் ஆராய்ந்தனராம்.

அதுவுமன்றி, மேற்கூறிய கருத்துடைய உறுப்பினர்கள், இந்தி பற்றி அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ள வாசகங்கள் அனைத்தையும் சட்டத்திலிருந்து அகற்றிவிட சிபாரிசு செய்வது என்றும், 'இந்தி ஆட்சி மொழியாக ஆவதை நாங்கள் விரும்பவில்லை; தாங்கள் விரும்பினால், இந்தி பேசாதவர்களே அதைக் கோரட்டும்,' என விளக்கம் தந்துள்ளனர் என்றும் அறியக்கிடக்கிறது.

இந்தியில் செல்வாக்கு பெற்றுள்ள ஒருவர், ஆட்சி மொழியாக இந்தியை ஒப்புக்கொண்டுள்ள அரசியல் விதியைக்கூட அறவே சட்டத்திலிருந்து அகற்றிவிடக் கூடத் தாம் சம்மதிப்பதாகக் கூறினதாகவும் சொல்லப்படுகிறது.

அகில இந்திய அரசாங்கப் பரீட்சைகளுக்கு இந்தி கட்டாயமாக்கப்படுமானால், அகில இந்திய அரசாங்க ஊழியங்களில் இந்தி மொழியினருடன் தங்களால் போட்டியிட முடியாது என தென்னாட்டவர் கொள்ளும் அச்சத்திற்கும் அக்கூட்டத்தினர் விளக்கமும் தந்துள்ளனர்.

மத்திய பாரத் போன்ற மாநிலங்களில் அரசியல் சட்ட விதிப்படி, எல்லா காரியங்களுக்கும் இந்தி ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கிறது. இப்பகுதிகளிலிருந்து பட்டம் பெற்று வருகிறவர்கள், ஆங்கிலம் கட்டாயப்படுத்தப் படுவதால், மத்திய அரசாங்கத்தில் பதவி பெற முடியாமல் வாடுகின்றனர். 'அரசியல் சட்டத்தை மதித்து இந்தியை ஒப்புக்கொண்ட காரணத்தால் ஏன் இவர்கள் தொல்லைக்கு ஆளாக வேண்டும்?' என ஒருவர் குறிப்பிட்டார்.

இந்தி புகுத்தப்பட்டதால் சிலர் பாதிக்கப்படுகிறார்கள் என்றால், இந்தி விலக்கப் படுவதாலும், அதற்கு அதிகமானவர்கள் என்று இல்லையாயினும், அதற்குச் சமமான எண்ணிக்கையினர் பாதகமடையவே செய்வர்.

'யுத்தம் வராமலேயே மனித சமூகம் அழிந்துவிடும்!'

நீர்வளிக் குண்டு சோதனை விளைவு: அனூரின் பெவான் எச்சரிக்கை

உலகத்தில், நீர்வளிக் குண்டு பரிசோதனைகளின் விளைவாக கதிரியக்க சக்தி, ஆபத்தான அளவுக்கு அதிகமாக உயர்த்தப்படும் பயங்கரமான ஆபத்து இருந்து கொண்டிருப்பதாக, தொழிற் கட்சி இடது சாரித் தலைவரான அனூரின் பெவான் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"நீர்வளிக் குண்டு பரிசோதனைகளை நிறுத்துவதற்கு உலக வல்லரசுகள் உடன்கூடிப் பேசவேண்டும்; உலகத்தில் கதிரியக்க சக்தி அதிகரிக்குமானால், குழந்தைகள் பிறப்பதில் பெருங்கேடு பயக்கும் பயங்கர விளைவுகள் உருவாகும் என்று, விஞ்ஞானிகள் நமக்குக் கூறுகின்றனர்.

"அமெரிக்கர்கள் இதுவரை 60 குண்டுகள் வெடித்திருக்கின்றனர். பிரிட்டன் சில அணுகுண்டுகளை வெடித்திருக்கிறது. ரஷ்யர்கள், 6 அல்லது 8 குண்டுகள் வெடித்திருக்கின்றனர்; எனவே, மீண்டும் ஒரு யுத்தமில்லாமலேயே, உலக மனித சமூகம் அழிந்துபடக் கூடும்,"

என்று, அனூரின் பெவான் எச்சரித்திருக்கிறார்.

நீர்வளிக் குண்டு சோதனை

சைபீரியாவில் ரஷ்யா மேற்கொண்டது

சோவியத் ரஷ்யா அண்மையில் மத்திய சைபீரியாவில் நீர்வளிக் குண்டு ஒன்றை வெடித்து பரிசோதனை செய்திருக்கக்கூடும்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 12—5—'55 வியாழன்

எப்படி ஏற்கிறாரோ?

அகில இந்திய அரசாங்க ஊழியர் பட்டத்திற்கு நடைபெறும் பரீட்சையில் பங்கு கொள்ளுகிறவர்கள், இந்தி மொழியிலும் தேர்வு பெற வேண்டுமென்பது இந்தியப் பேரரசின் ஆணையாகும். சென்னை அரசாங்கத்தின் சார்பில், அந்த ஆணையை வெளிப்படையாக எதிர்த்து அறிக்கை விட்டார், கல்வி அமைச்சர் கனம் சுப்பிரமணியம்.

கனத்தின் அரசியல் ஆசான் ஆச்சாரியார், ‘பாஷைப் பிரச்சினை’ எனத் தலைப்பிட்டு, இந்தி மொழியின் அவலட்சணத்தையும், இந்தி வெறியர்களின் சண்டித்தனத்தையும், ஆட்சி மொழியாவதற்குரிய அருகதை இந்தி மொழிக்குக் கிடையாது என்பதையும் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டிவிட்டார்.

கிளம்பக்கூடாத இடத்திலிருந்தும், எதிர்பார்த்திராத இடத்திலிருந்தும், இந்தி மொழிக்கு எதிர்ப்பு கிளம்பியதைக் கண்டதும்—அதுவும் ஆட்சி மொழியாக இந்தியை ஒப்புக்கொண்டவர்களிடமிருந்தே எதிர்ப்பு ஏற்பட்டதை அறிந்ததும், உள்நாட்டு அமைச்சர் பண்டித பந்த், காங்கிரஸ் செயற் குழுவின் தீர்மானத்தை பக்கபலமாகக் கொண்டு, இந்தியப் பேரரசின் போக்கிற்கு விளக்கம் கொடுத்தார்.

அந்த விளக்கம் இந்தியப் பேரரசின் பிடிவாதத்திற்கு ஆதரவாக இருக்கிறதே அல்லாது, சிறிதளவும் எதிர்ப்பாக இருக்கவில்லை. எனவே, அந்த விளக்கத்தை ஆச்சாரியார் ஏற்றுக்கொள்ளவில்லை.

உள்நாட்டு அமைச்சர் கூற்றை தாம் ஒப்புக்கொள்ளாததை வெளிப்படையாக ஆச்சாரியார் கூறியும் இருக்கிறார். அதாவது, ‘இந்தியைப் பற்றும், அகில இந்திய அரசாங்க பரீட்சைகள் பற்றியும் மக்கள் சபையில் கூறப்பட்டிருப்பது எனக்குத் திருப்தியளிப்பதாயில்லை,’ என, ஆச்சாரியார் அறிவித்துள்ளார்.

அகில இந்திய அரசாங்கப் பரீட்சைகளுக்கு இந்தியைக் கட்டாயப்படுத்தும் இந்தியப் பேரரசின் போக்கிற்குச் சாதகமாக, உள்நாட்டு அமைச்சர், ஓராண்டு காலத்திற்கு முன்பாக காங்கிரஸ் செயற்குழு நிறைவேற்றியுள்ள தீர்மானத்தையே எடுத்துக் காட்டியுள்ளார். எனவே, அந்தத் தீர்மானம் என்ன கூறுகிறது என்பது ஆராயத்தக்கது.

ஆட்சி மொழியாக உள்ள ஆங்கிலத்தை அகற்றிவிட்டு அதனிடத்தில் இந்தியைப் புகுத்துவதற்கான இடைக் காலத்தை மூன்று கட்டமாகப் பிரித்திருக்கிறது காங்கிரஸ் தீர்மானம். அத்துடன் ஒவ்வொரு காலக் கட்டத்திலும் இந்தியை எவ்வாறு புகுத்துவது என்பதற்குரிய முறைகளையும் மேற்படி தீர்மானம் சுட்டிக்காட்டி இருக்கிறது.

அதாவது, அகில இந்திய அரசாங்கப் பரீட்சைகளை, ஆங்கிலம், இந்தி, ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள வட்டார மொழிகளில் ஏதாவது ஒன்று ஆகிய மூன்று மொழிகளில் நடத்த வேண்டுமெனவும், மேற்குறிப்பிட்டுள்ள மூன்று மொழிகளில் ஏதாவது ஒன்றில் பரீட்சை எழுதினால் போதுமெனவும், காங்கிரஸ் தீர்மானித்துள்ள முதல் கட்ட ஏற்பாடு அறிவிக்கிறது. அதுவுமன்றி, இந்தி மொழியிலோ, ஏதாவது ஒரு வட்டார மொழியிலோ பரீட்சை எழுதுகிறவர்கள், ஒரு ஆங்கில மொழி கேள்வித்தாளுக்கும் கட்டாயமாக பதில் எழுத வேண்டுமெனவும் தீர்மானம் கூறுகிறது.

மேற்குறித்துள்ள இரண்டோடும் காங்கிரஸ் தீர்மானம் நின்றுவிடவில்லை. மேற்கூறிய முறையில் பரீட்சை எழுதித் தேர்ச்சி பெற்றவர்கள், இந்தியில் பரீட்சை எழுதித் தேறினவர்கள் நீங்கலாக மற்றவர் அனைவரும், குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் இந்தி மொழிப் பரீட்சையிலும் தேர்ச்சி பெற்றாக வேண்டியது கட்டாயமாகும் என வலியுறுத்தும் அளவிற்குக் காங்கிரஸ் தீர்மானம் விரிந்து இருக்கிறது.

அகில இந்திய அரசாங்கப் பரீட்சையில் பங்கு கொள்ளும் குறிப்பிட்ட ஒரு நேரத்திலேயே இந்தி மொழியிலும் தேர்ச்சி பெற்றாக வேண்டும் என்றுதான் கட்டாயப்படுத்தப்படவில்லையே அல்லாது, சில நாள் சென்ற பின் இந்தியிலும் கண்டிப்பாகத் தேர்ச்சி பெற்றாக வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதை வற்புறுத்தாமல் இல்லை காங்கிரஸ் தீர்மானம். காலத்தில்தான் சிறிதளவு மாற்றம் புகுத்தப்பட்டிருக்கிறதே ஒழிய, கட்டாயப்படுத்தி இந்தியைத் திணிப்பதை காங்கிரஸ் தீர்மானம் கைவிட்டதாக இல்லை.

அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்த பதினைந்து ஆண்டுகளுக்குள்ளாக, ஆட்சி மொழியான ஆங்கிலத்தின் இடத்தை இந்தி, முழு அளவில் நிரப்பிவிட வேண்டுமென்கிறது அரசியல் சட்ட விதி. சட்டம் நடைமுறைக்கு வந்து ஏற்கனவே ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டன; இன்னும் பத்து ஆண்டுகளே உள்ளன இந்தி ஆங்கிலத்தின் அந்தஸ்தைப் பெறுவதற்கு. இந்த இடைக்காலமான பத்து ஆண்டு காலத்திற்குள் அகில இந்தியப் பரீட்சைகளில் தேர்ச்சி பெற்றுள்ளவர்கள், கட்டாயமாக இந்தியிலும் தேர்ச்சி பெற்றாக வேண்டும். முடியுமா?

அகில இந்தியப் பரீட்சைகளில் இந்தியைக் கட்டாயப்படுத்துவது, இந்தி பேசாத மக்களுக்கு, சட்டப்படி இல்லையானாலும், பொதுவாக பேதங் காட்டுவதாகும் என ‘இந்து’ இதழ்கூட எடுத்துக்காட்டியுள்ளது.

அகில இந்தியப் பரீட்சைகளில் பங்கு கொள்ளுகிறவர்கள், தங்கள் தங்கள் வட்டார மொழிகளிலும் எழுதலாம் என்பதிலும் சிக்கல் இல்லாமல் இல்லை. இதிலுள்ள சங்கடத்தையும் ‘இந்து’ இதழ் சுட்டிக் காட்டியுள்ளது.

எடுத்துக்காட்டுக்காகத் தமிழ் மொழியை எடுத்துக் கொள்ளுவோம். கல்லூரிகளில், பயிற்சி மொழியாக இன்னும் தமிழ் ஆக்கப்படவில்லை. இந்நிலையில், ஆங்கிலத்தைப் பயன்படுத்துவது போன்றே தமிழைப் பயன்படுத்துவதற்கு, பரீட்சையில் கலந்துகொள்ளுகிறவர்களுக்கு ஆற்றல் இருக்குமென எதிர்பார்க்க முடியாது. இக்கருத்தைத்தான் ‘இந்து’ எடுத்துக் காட்டி இருக்கிறது.

அகில இந்திய அரசாங்கப் பரீட்சைகளுக்கு இந்தியைக் கட்டாயப் படுத்தும் இந்தியப் பேரரசின் ஆணையிலுள்ள தீமை, உள்நாட்டு அமைச்சர் கூறிய விளக்கத்தால் குறைந்துவிடவுமில்லை — மறைந்துவிடவுமில்லை என்பது தெளிவு. கேடு உறுதி செய்யப்பட்டு இருக்கிறது என்றே கூறவேண்டும்.

ஆனால், உள்நாட்டு அமைச்சரின் விளக்கம், கனம் கல்வி அமைச்சர் சுப்ரமணியத்திற்கு மட்டும் திருப்தி அளிப்பதாக இருக்கிறது. ஆரம்பத்தில் அதிருப்தி அடைந்த அவர், பின்னர் எப்படி திருப்தி அடைந்தாரோ? நாம் அறியோம்!

குருநாதர் ஆச்சாரியார் போன்றே, இந்தி விஷயத்தில் தாமும் தன்னந்தனியனாக விவாதித்துக் கொண்டிருக்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்துவிட்டார் போலும் கனம் அமைச்சர்! அதுதான் உண்மையாக இருக்கவேண்டும்.

அணுகுண்டு பரிசோதனை

கடலுக்குக் கீழும் நடத்த அமெரிக்கா முடிவு

தண்ணீருக்குள்ளும் அணுகுண்டை வெடித்துப்பார்க்கும் சோதனை ஒன்றை சில நாட்களில் மேற்கொள்ளப் போவதாக, அமெரிக்க பாதுகாப்பு இலாகா அதிகாரி தகவல் தந்திருக்கிறார்.

இந்தச் சோதனை, மேற்குக் கடற்கரையில் பலநூறு மைல்களுக்கப்பால் நடுக்கடலில் நடைபெறும் என்றும் கூறப்படுகிறது.

இந்தச் சோதனை, நீர்மூழ்கிக் கப்பல்களின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான வழிவகைகளைத் தெரிந்து கொள்வதற்காக அணுசக்தி பரிசோதனைக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாம்.

பரிசோதனை நடக்குமிடம் மீன் பிடிக்கும் பகுதிகளுக்கு வெகு அப்பால் இருப்பதுடன், இந்தச் சோதனையினால், கடலை அடுத்த நிலப்பரப்பில் வாழ்வோருக்கோ, கடலிலிருக்கும் தீவுகளில் வாழ்வோருக்கோ எந்தவிதமான தீங்கும் நேரிடாது என்று கூறப்படுகிறது.

கடல் அடியில் அணுகுண்டு பரிசோதனை செய்யப்படுவதால் ஏராளமான கடல் வாழ் உயிர்கள் பாதிக்கப்படுவதுடன், மற்றும் சில பாதகங்களும் கடல் நீர் மூலம் பரவக் கூடும் என்று விஞ்ஞான நிபுணர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

துண்டு நிலங்களை ஒன்று சேர்க்க!

துண்டு நிலங்களை ஒன்றுசேர்ப்பதற்கு எல்லா மாநில சர்க்கார்களும் சட்டம் இயற்றவேண்டும் என்றும், இந்த நடவடிக்கைகளனைத்தும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அபிவிருத்தித் திட்டக் குழுக்களின் கமிஷனர்கள் மாநாட்டில் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதாம்.

‘சர்வோதயம்’ என்ற சொல்லை காங்கிரஸ் ஏன் ஏற்கவில்லை?

‘சோஷலிசம்’ என்ற வார்த்தையை ஏற்றதற்கு நேருவின் பசப்பு!

பெர்காம்பூர், மே. 9—

‘சர்வோதையா’ என்ற சொல்லுக்குப் பதிலாக ‘சோஷலிசம்’ என்ற வார்த்தையை இந்தியாவின் இலட்சியத்தைக் குறிப்பிடும் சொல்லாக காங்கிரஸ் உச்சரித்து வருகிறது. ஆரம்பத்தில் ‘சர்வோதையம்’ என்ற சொல்லை ஆதரித்ததற்கும், அதைப் பின்னர் கைவிட்டுவிட்டு, ‘சோஷலிசம்’ என்ற சொல்லை உரத்துச் சொல்லி வருவதற்கும் உள்ள காரணத்தைப் பண்டிதர், காங்கிரஸ் குழு கூட்டத்தினருக்கு விளக்கினார். அது விளக்கமல்ல; வெறும் பசப்பு!

‘சோஷலிசம்’ என்ற சொல்லைக் காட்டிலும் ‘சர்வோதயம்’ என்ற சொல் மேலானது என்று நான் நினைக்கிறேன்; ஆனால், நாம் அந்தச் சொல்லை உபயோகிக்கும் தகுதியுடையவர்களா என்பதில் எனக்கு நிச்சயம் இல்லை.

“ஆச்சாரியா வினோபா பாவே போன்றவர்கள்தான் அந்தச் சொல்லை உபயோகிக்கும் தகுதியுடையவர்கள்; ஏனெனில், அவர்கள், அந்த லட்சியத்துடன் வாழ்வது மட்டுமின்றி, பிறரையும் வாழச் செய்பவர்களாக இருக்கிறார்கள்; ஆனால், நாம் அந்தச் சொல்லை உபயோகித்துக் கொண்டு அதன்படி நடக்கவில்லையானால் அது நல்லதல்ல!

“நாம் அந்தச் சொல்லை உபயோகிக்கும் தகுதி பெற்ற பிறகு அதனை உபயோகிக்கும் காலம் வரும்.

“மேலும் ‘சர்வோதயம்’ என்ற சொல் வரலாற்றுத் தொடர்பு கொண்டதல்ல; ‘சோஷலிசம்’ என்ற சொல்லுக்கும் ஆயிரம் பொருள்கள் இருப்பதும் உண்மைதான்; ஆனால், ‘சோஷலிசம்’ என்ற அந்தச் சொல்லுக்குப் பின்னால், ஒரு வகை வரலாற்றுத் தொடர்பு இருக்கிறது.

“நாம் ஒரு சோஷலிச முறை மாதிரி வேண்டும் என்னும் போது, அது, ஏறத் தாழ திட்டமான ஒன்றைத் தெரிவிக்கிறது.”

இவர் கூறிவிட்டால் போதுமா?

“இந்தி மொழி மட்டுமின்றி மற்றப் பிரதேச மொழிகளும் ஆங்கிலமும் அகில இந்திய உத்தியோகங்களுக்கான தேர்வு மொழியாக அங்கீகரிக்கப்பட்டால் மற்றக் கஷ்டங்களனைத்தும் தீர்ந்துவிடும்”

என்று சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் கூறினார்.

‘ஐ ஏ எஸ். தேர்வை இந்தி மொழியிலேதான் எழுத வேண்டும்,’ என்ற பிரச்சினை குறித்து அவர் கூறுகையில், “ஏற்கனவே மத்திய சர்க்காருக்கு இப்பிரச்சினை பற்றிய மாநில சர்க்காரின் நிலை தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது; இப்போது இந்திக் குழு நியமிக்கப்பட்டிருப்பதால் இப்பிரச்சினையை இனிமேல் அக்குழுவே கவனிக்கும்” என்று கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது:—

“மாணவர்கள் தம் சுயஇச்சைப்படி செய்ய வழிவகைகள் இருக்க வேண்டும்; ஆஜ்மீர் காங்கிரஸ் தீர்மானத்தில் கண்டுள்ள நிலைமை ஒப்புக்கொள்ளப்படுமானால், பின்பு குறைகூற இடமே கிடையாது. மாணவர்களின் சுய இச்சைப்படி விட்டுவிட்டுபிரதேசமொழியிலோ, ஆங்கிலத்திலோ, அல்லது இந்தியிலோ தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டால், தேர்வில் வெற்றிபெறும் மாணவர்கள் பின்னர் இந்தியில் தேர்வு எழுத எவ்வித ஆட்சேபனையும் இருக்காது. ஆனால் மாணவர்கள் நிலைமைக்கேற்ப நடந்து கொள்ள அவகாசம் அளிக்கப்பட வேண்டும்.”

முதியவர் சேர்த்த மூலதனம்!

தாய் நல விடுதிக்குப் பயன்பட்டது!

பரோடா, மே 10—

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் இச்சம்பவம் நடைபெற்றது.

கைரா மாவட்டக் கழக அலுவலகத்தில் ஒரு முதியவர் நுழைந்து, தலைவரைப் பார்க்க அனுமதி கோரினாராம்!

தலைவரின்முன் சென்று, தன் கையில் மடக்கி வைக்கப்பட்டிருந்த குடையை தலைகீழாகக் கவிழ்த்தாராம்!

குடையிலிருந்து ஏராளமான ரூபாய் நோட்டுகள் கீழே விழுந்தன. ஆச்சரியத்துடன் தன்னை நோக்கிக்கொண்டிருந்த மாவட்ட கழகத் தலைவரிடம் அந்த முதியவர், இது, தான் நீண்ட காலமாகச் சேர்த்து வைத்திருந்த பணம் என்றும், இப்போது சுமார் ரூ 25,000 சேர்ந்துள்ளதென்றும், திருடர்களுக்குப் பயந்து தான் குடைக்குள் பணத்தை வைத்துக் கொண்டு வந்ததாகவும் கூறினாராம்.

மணிலால் மோதிலால் தேசாய் என்ற அந்த முதியவர், தனக்கு 64 வயதாகிறதென்றும், தனது பணத்தை தனது கிராமத்தில் பெண்களுக்கான மருத்துவமனை ஒன்றைக் கட்டுவதில் செலவிட வேண்டுமென்றும் மாவட்டக் கழகத் தலைவரிடம் கேட்டுக்கொண்டாராம்.

அதுபோல் அந்த முதியவரின் கிராமத்தில் பெண்களுக்கான மருத்துவமனை ஒன்று கட்டப்பட்டு சென்ற வியாழனன்று திறக்கப்பட்டதாம்.

பரோடா சுகாதார அமைச்சர் இத்திறப்பு விழாவை நடத்தி வைத்தார். இந்த நிகழ்ச்சியை மகிழ்ச்சியுடன் கண்டுகளித்தாராம், அந்த முதியவர்!

கைது செய்தால்!

“உயர் அதிகாரிக்கு அறிவிக்க வேண்டும்”

சர்க்கார் ஊழியருக்கு உத்தரவு

சர்க்கார் உத்தியோகத்திலிருப்போர் தாங்கள் எந்தக் காரணத்திற்காகவாவது கைது செய்யப்பட்டால், உடனே தங்கள் மேலதிகாரிக்கு அதுபற்றி தகவல் தெரிவிக்க வேண்டும் தாங்கள் உடனே ஜாமீனில் வெளிவந்திருந்தாலும் கூட, தாங்கள் கைது செய்யப்பட்டது பற்றித் தெரிவித்தாக வேண்டும்.

அறிவிக்கத் தவறினால் அதற்காக மட்டுமேகூட அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். போலீஸ் வழக்கினால் இவர்களுக்கு இலாகாவில் தரப்படும் தண்டனைக்கும் அப்பால் இந்த தண்டனை விதிக்கப்படுவதாகும்.

இதுபற்றி சர்க்கார் உத்தியோகத்திலிருப்போருக்கு 1949-ம் ஆண்டிலேயே உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்தும், அவை நடைமுறையில் அமுல் செய்யப்படவில்லையாதலால் இப்போது புதியதாக அவை புதுப்பிக்கப்படுகின்றன என்று தெரியவருகிறது.

'பிரிட்டிஷ் ஆட்சியை ஒழித்துக் கட்டுவோம்'

'இராஜபுத்திர அரசர்களே ஒன்றுபடுங்கள்'

கடைசி மொகலாய சக்கரவர்த்தியின் இறுதி முயற்சி

புதுடில்லி, மே 10—

"இராஜபுத்திர அரசர்களே ஒன்றுபடுங்கள்; பிரிட்டிஷாரை விரட்டுங்கள். அதிகாரத்தை நானே பெறவேண்டும் என்ற விழைவினுல் இவ்வாறு நான் கோரவில்லை. அனைத்து அன்னிய நாட்டினரையும் இம்மண்ணிலிருந்து அகற்றிவிட்ட பிறகு, ஆட்சிப் பொறுப்புக்கு நீங்களே உங்கள் விருப்பம்போல் எவரையாவது தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்."

—இக்கருத்துடைய சுற்றறிக்கை ஒன்றை, மொகலாய சக்கரவர்த்திகளின் கடைசி வாரிசான பகதூர் ஷா இராஜபுத்திர அரசர்களுக்கு, 1856-ம் ஆண்டில் அனுப்பியிருக்கிறார்.

இவ்வரலாற்று உண்மையை, மேற்படி சுற்றறிக்கையை ஆதாரமாகக் கொண்டு, எஸ். எம். கோஷ் என்பவர் மக்கள் சபை உறுப்பினர் கூட்டமொன்றில் அறிவித்துள்ளார். 'கூட்டு முயற்சியின் மூலம் அன்னிய ஆட்சியை ஒழிப்பதற்கு 1857-ம் ஆண்டுக்கு முன்பே முயற்சிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு, பகதூர் ஷாவின் மேற்படி சுற்றறிக்கை ஒரு எடுத்துக்காட்டாகும்' என அவர் கூறினர்.

இந்திய விடுதலைக் கிளர்ச்சியை தக்க ஆதாரங்களுடன் தொகுப்பதற்காக 'சுதந்திரப் போர் வரலாற்றுக் குழு' என ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. அக்குழுவின் செயலாளர்தான் எஸ். எம். கோஷ் என்பவர்.

சமுதாய நலத் திட்டங்கள்

8,000 பெண் கிராம ஊழியர்கள் ஈடுபடுவர்

ரூ. 20 கோடி செலவிடப்படும்?

மத்திய சமுதாய நலத் திட்டக் குழு ஆரம்பித்து நடத்தும் சமூக நல விரிவுபடுத்தும் திட்டங்களை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மூன்று மடங்காகப் பெருக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம்.

இரண்டாவது திட்டத்தில் 8,000 பெண் கிராம ஊழியர்களும், 1,500 பெண் மருத்துவர்களும், 6,000 ஆயாக்களும் தேவைப்படுவர் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்திய சர்க்காரின் அங்கீகாரம் கிடைத்த பின்னர், பெண் மருத்துவர்கள், ஆயாக்கள் ஆகியோரின் பயிற்சிக்கு சுகாதார இலாகாவைக் கலந்துகொண்டு ஏற்பாடுகள் கவனிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

சமூக நல ஊழியம் செய்து வரும் பொது நிறுவனங்கள் தம் வேலைகளை மேலும் விரிவுபடுத்தவும், அவைகளுக்கு மேலும் ஊக்கமளிக்கவுமான வகையில், 5,000 சமூக நல ஊழிய நிறுவனங்களுக்கு இரண்டாவது திட்டக் காலத்தில் நிதி உதவி செய்யப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. சென்ற இரண்டு ஆண்டுகளில், குழு, இவ்வகையான நிறுவனங்களுக்கு ரூ. 55 இலட்சத்திற்கு நிதி உதவி செய்திருக்கிறது. மேலும் நிதி உதவி செய்வதற்கு ரூ. 5 கோடி தேவையாகுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறதாம். எனவே, அடுத்த திட்டத்தில், போர்டின் வேலைகளுக்கென மதிப்பிடப்பட்டிருக்கும் தொகை மொத்தமாக ரூ. 20 கோடி என்று தெரிகிறது.

போலந்து தலைநகரில் ரஷ்யப் பிரதமர்

ரஷ்யப் பிரதமர் புல்கானினும், வெளிநாட்டமைச்சர் மாலடோவும் போலந்தின் தலைநகர் வார்சாவுக்கு வந்து சேர்ந்துள்ளனராம். இவர்கள் இருவரும் மேற்கத்திய இராணுவ முயற்சிகளுக்கு எதிராக 11-ந் தேதி முதல் கம்யூனிஸ்டுகள் நடத்த இருக்கும் கூட்டுப் பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொள்வார்களாம்.

கோடிக்கணக்கான பிரச்சினைகள்!

பெர்காம்பூர், மே. 10—

"இந்தியாவில் 36 கோடி பிரச்சினைகள் இருக்கின்றன; 'சுதந்திர இந்தியா'வில் ஒவ்வொரு தனி நபருக்கும் மதிப்புண்டு; எனவே ஒவ்வொரு நபருக்கும் ஒரு பிரச்சினை வீதம் 36 கோடி பிரச்சினைகள் இருக்கின்றன," என்று, பிரதமர் நேரு பண்டிதர் இங்கு நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

"ஒவ்வொருவருக்கும் தேவையான உணவும், உடையும், உறைவிடமும் இருந்தால்தான் இந்தியா 'சுதந்திரம்' பெற்றதாகக் கருதலாம். சிலரிடம் மட்டுமே உள்ள உடைமைகளைக் கொண்டு ஒரு நாட்டின் 'சுபீட்ச'த்தை மதிப்பிட்டுவிட முடியாது. ஒரு நாட்டின் முழு நிலையையும் அந்நாட்டின் இலட்சோப இலட்சம் மக்களின் நிலையைக் கொண்டே அறிகிறோம். பல கோடிக்கணக்கான மக்கள் துன்பத்திலும், துயரத்திலும் உழன்று கொண்டிருந்தால் அந்நாடு முழுமையுமே பின்தங்கிக் கிடக்கும் — அபிவிருத்தி பெறாத ஒன்றாகவுமேதான் இருக்கும்; இதை மனதில் கொண்டு, கோடானுகோடி மக்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதற்கு நாம் அரும்பாடுபட வேண்டும்."

கவர்னரும் - புகையும்!

பெர்காம்பூர், மே. 10—

"காங்கிரஸ் ஆட்சியின்கீழ் பணியாற்றும் கவர்னர்கள் புகை பிடிக்கலாமா?"

இந்தக் கேள்வியை, பம்பாய் கவர்னர் அரிகிருஷ்ண மெஹ்தாப் தன்னைப் பார்த்தே கேட்டுக்கொண்டிருக்கிறாராம்.

தனது கவர்னர் பதவி காலம் முடியும் வரையிலாவது புகை பிடிக்காமல் இருக்க அவர் விரும்புகிறாராம்.

"தனது நடத்தையினுல், மக்களிடையே காணப்படும் நல்லொழுக்கத்திற்குக் கேடு கூடாது," என்று அவர் கருதுகிறாராம்!

நீரிழிவுநோய்க்கு மூலிகை மருந்து

திருவனந்தபுரம், மே 7—

நீரிழிவு வியாதி சம்பந்தமாக ஆராய்ச்சி செய்துவந்த திரு-கொச்சி இரசாயன பேராசிரியர் டாக்டர் பிள்ளை என்பவர் ஆயுர்வேத மூலிகைகளால் தயாரிக்கப்படும் ஒரு பஸ்பத்தைச் சாப்பிடுவதால் இவ்வியாதியை நிரந்தரமாகத் தடுக்க முடியும் என்று நம்புகிறார்.

5 மூலிகைகளால் இந்த பஸ்பம் தயாரிக்கப்படுவதாயும், இந்த பஸ்பம் சாப்பிடுவோர் சர்க்கரை சாப்பிடக் கூடாதெனவும், காய்கறி வகைகளையும், மாமிசத்தையும் அதிகம் சாப்பிட வேண்டும் என்றும், பஸ்பம் சாப்பிடுவதால் ஆபத்து ஒன்றுமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

போர்க்காலப் 'புலி'யின் தந்திரம்!

பொய்யான புள்ளிவிவரம் காட்டி ஜெர்மன் தளபதியை ஏமாற்றினர்

நாஜிகளின் வீழ்ச்சி பற்றிய விபரம்

நாஜிகளை சரணடையச் செய்ய, நேசப்படைகளின் தளபதியாக இருந்த பெடல் ஸ்மித், தந்திரம் ஒன்றைக் கையாண்டாராம்.

ஏராளமான நேசதேசத் துருப்புகள் வைக்கப்பட்டிருப்பதாக பல இடங்களைக் குறிப்பிட்ட படம் ஒன்றை, பெடல் ஸ்மித் ஜெர்மானியத் தளபதியிடம் காட்டினராம்.

1945 மே திங்களில், நாஜிகளின் தளபதி ஹான்ஸ் ஜார்ஜ் என்பவர், நேசப்படைகளின் தளபதியான பெடல் ஸ்மித்திடம் வந்து, தாங்கள் ரஷ்யர்களிடம் நேரடியாகச் சரண் அடைய விரும்பவில்லை என்றும், நேசப் படைகளுடன் போர் நிறுத்தம் செய்து கொள்ள விரும்புவதாகவும் தெரிவித்தாராம்.

அப்போது, ஜெர்மனியின் படையை இரண்டு துண்டுகளாக்கப் போதுமான படைகள் பல இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்ற நிலையைக் காட்டும் படம் ஒன்றைத் தயாரித்து ஜெர்மன் தளபதியிடம் காட்டினர்களாம்.

இப்பொய்யான படத்தைக் கண்ட ஜெர்மன் தளபதி கண்ணீர் விட்டாராம்!

மறுநாள், ஜெர்மன் படையின் தலைவர் நேசப்படைகளிடம் போர் நிறுத்தம் கோரினராம்; மேற்கத்திய நாடுகள் மறுத்தனவாம்.

"உடனே சரண் அடையாவிட்டால், ஜெர்மானியர் ஆயுதம் எதும் இன்றி இருந்தாலும் அவர்கள் சுட்டுத்தள்ளப்படுவார்கள்," என்று நேசப்படைகளின் தலைவர் ஐசன் ஹோவர் கூறிவிட்டாராம்.

வேறு வழியின்றி ஜெர்மானியர் நிபந்தனையின்றி, அந்த பொய்ப் படத்தைக் கண்டு பயந்து சரண் அடைந்தார்களாம்.

இச்செய்தியை பெடல் ஸ்மித் 'பாரேட்' என்ற இதழில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் கூறியுள்ளார்.

நிலக்கரிச் சுரங்கம்

3,51,061 தொழிலாளர்கள் பணி புரிந்தனர்

இந்தியா தரும் புள்ளி விவரம்

இந்தியாவிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களில், நிலக்கரி உற்பத்தி இவ்வாண்டு பிப்ரவரி திங்களில் 32,51,682 டன்னாக இருந்தது. மார்ச்சு திங்களில் 33,04,154 டன்னாக உயர்ந்துவிட்டதாகத் தெரியவருகிறது.

பரிசீலனை திங்களில், 841 நிலக்கரிச் சுரங்கங்களில் நாள்தோறும் சராசரி 3,51,061 தொழிலாளர்கள் வேலைபார்த்து வந்ததாகத் தெரிகிறது.

ஒன்பது செக்கண்டில் ஒரு கார்!

பிரிட்டிஷ் மோட்டார் உற்பத்தி பிரமிக்கத்தக்க அளவில் பெருகி வருகிறது. இவ்வாண்டு ஜனவரி—மார்ச் மாதங்களில் 3,00,000 மோட்டார்கள் ஏற்றுமதியாயின. இம்மாதங்களில் உற்பத்தியான கார்கள் 2,34,000; டிரக்குகள் 84,000; சராசரி ஒன்பது செக்கண்டுகளுக்கு ஒரு கார் விகிதம் உற்பத்தி செய்யப்படுகிறது!

உபகாரச் சம்பளங்கள்

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட சாதியினர், மற்றும் பிற்பட்ட வகுப்பினர்—ஆகியோருக்கு, 1955—56ல், உபகாரச் சம்பளங்கள் வழங்குவதற்காக இந்திய சர்க்கார் ரூ. 130 லட்சம் மானியமாக அனுமதித்திருக்கின்றனர்.

'சேது சமுத்திர'த் திட்டம்

இலங்கை---இந்தியக் கடல் வெளி ஆழமாக்கப்படும்

சென்னை, மே 10—

ஆழக் கடலில் செல்லக்கூடிய பெரிய கப்பல்கள் இந்தியாவின் மேற்குக் கடலிலிருந்து கிழக்குக் கடலுக்குச் செல்ல வசதியளிக்கும் வகையில் இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிலுள்ள கடலை ஆழப்படுத்துவதற்கான 'சேது சமுத்திர'த் திட்டம் ஒன்று மத்திய சர்க்காரின் பரிசீலனையில் இருந்து வருகிறதாம். இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மொத்தம் 4 கோடி ரூபாய் வரையிலும் செலவாகுமென்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுமானுல், இலங்கையிலிருந்து குடியுரிமை மறுக்கப்பட்டு வெளியேற்றப்படும் இந்திய மக்களுக்கு வேலை கிடைப்பதற்கான வாய்ப்பும் வசதியும் கிடைக்குமென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தத் திட்டத்தை இந்திய சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளும்படி சென்னை மாநில சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

இத்திட்டம் நிறைவேற்றப்படுமானுல், இந்தியாவிலுள்ள தனுஷ்கோடிக்கும், இலங்கையிலுள்ள தலைமன்னருக்குமிடையேயுள்ள ஆழமில்லாத கடல் பகுதி, பெரிய கப்பல்கள் போய்வருவதற்கேற்றவாறு ஆழமாக்கப்படும். தற்போது இவ்வழியாக சிறு கப்பல்களும், படகுகளும்தான் செல்ல முடியும்.

இதுவரையிலும், இந்தியாவின் கிழக்குக் கடற்கரையிலிருந்து மேல் கடற்கரைக்கோ, அல்லது மேல் கடற்கரையிலிருந்து கீழ் கடற்கரைக்கோ செல்லும் கப்பல்கள் இலங்கைத் தீவைச் சுற்றித்தான் செல்ல வேண்டும்.

தேசிய அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக சென்னை மாநில நிதி அமைச்சர் சுப்பிரமணியம் டில்லி சென்றிருக்கையில், பிரதமர் நேருவைச் சந்தித்து, இத்திட்டத்தை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளும்படி வற்புறுத்தினராம்.

சென்ற சில ஆண்டுகளாக இந்தியாவின் கரையோர வர்த்தகம் பெருகியிருக்கிறது: இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் அரபிக் கடலிலிருந்து சென்னைக்கோ அல்லது கல்கத்தாவுக்கோ வரும் கப்பல்களுக்கு ஒவ்வொரு தடவையும் சுமார் 300 மைல் தூரக் கடற் பிரயாணம் குறையும்; இது தவிர, தனுஷ்கோடி கடல் அரிப்பும் ஓரளவிற்குத் தீரும் எனவும் நம்பப்படுகிறது. எனெனில், இத்திட்டத்தின் காரணமாகச் சிற்சில தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படலாம். அத்துடன், தூத்துக்குடி துறைமுகமும் அபிவிருத்தி அடைவதற்கான வழிவகைகள் ஏற்படலாம்.

'பாக்' நீர்ப்பகுதியை மன்னர் குடாக்கடலுடன் இணைப்பதும் இத்திட்டத்தின் நோக்கமென்றும் தெரிகிறது.

உடனடி வேலை!

"ஜூலை திங்கள் 2-ந்தேதிக்குள்ளாகவே மேற்கு ஜெர்மனியில் படை திரட்டப்படும்," என்று மேற்கு ஜெர்மன் பிரதமர் அடினர் அறிவித்திருக்கிறார்.

மேற்கு ஜெர்மனி படை திரட்டிக் கொள்ள மூன்று வல்லரசுகளும் அனுமதி தந்து சில தினங்கள்தான் ஆகின்றன.

தானிய வகைகள் சாகுபடி நிலவரம்

நடப்பு ஆண்டில், 3,41,31,000 ஏகராவில் காலப்பயிர் தானிய வகைகள் சாகுபடி செய்யப்பட்டதாகவும், 1,02,92,000 டன் உற்பத்தியாகுமென்றும் தெரியவருகிறது. 1953—54ம் ஆண்டில் திருத்தப்பட்ட இரண்டாவது மதிப்பீட்டில், இந்த அளவுகள் முறையே 3,23,93,000 ஏகராவும். 93,29,000 டன்னுமாக இருந்தன; எனவே, நடப்பு ஆண்டில் சாகுபடி பரப்பு 17,38,000 ஏகராவாகவும், உற்பத்தி 10,63,000 டன்னுவும் அதிகரித்திருக்கிறது.

ஒரே நிபந்தனை!

அமெரிக்கத் தலைவர் கூறுகிறார்

"சமாதானத்திற்காக யாரையும், எங்கே வேண்டுமானுலும் சந்திக்க நான் தயாராக இருக்கிறேன்; அத்தகைய சந்திப்பினுல் அமெரிக்காவின் சுயமரியாதைக்குப் பங்கம் விளைவிக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய ஒரே நிபந்தனை" என்று அமெரிக்கத் தலைவர் ஐசன் ஹோவர் கூறியிருக்கிறார்.

ரஷ்யாவுக்கு அழைப்பு

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நான்கு வல்லரசுகளின் மாநாட்டை நடத்துவதற்கு அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசன் ஹோவர் தமது ஒப்புதலைத் தந்துவிட்டாராம்.

அட்லாண்டிக் ஒப்பந்தக் குழுவும், ரஷ்யப் பிரதமர் புல்கானிக்கு அழைப்பு விடுப்பது என்று முடிவு செய்துள்ளதாம்.

மூன்று வல்லரசுகளின் தூதுவர்களும், இந்த நான்கு வல்லரசு மாநாடுகளில் கலந்துகொள்வதற்கான அழைப்பை ரஷ்ய சர்க்காரிடம் தந்துவிட்டனராம்.

சேர்ந்து வாழ முடியும்?

"கம்யூனிஸ்டு நாடுகளும் முதலாளித்துவ நாடுகளும் கூடி வாழ முடியும்" என்று சோவியத் ரஷ்யக் கம்யூனிஸ்டு கட்சியின் செயலாளரான குருஷ்சேவ், செக்கோஸ்லோவேகியா தூதுவராலயத்தில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பு ஒன்றில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

வயோதிகரை வாலிபராக்கும் விடுதலை வேட்கை!

கோவா விடுதலை போராட்டத்தில் கலந்து கொள்ளப் போவதாகவும், மே திங்கள் மூன்றாவது வாரத்தில் சத்தியாக்கிரகிகளுடன் சேர்ந்து கோவா எல்லைக்குள் நுழையப் போவதாகவும் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த 77 வயதுடைய சேனுபதி பாபத் என்பவர் அறிவித்திருக்கிறார்.

காடுகள் வளர்க்க ரூ. 217 கோடி!

இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், காடுகள் வளர்க்க ரூ. 217 கோடி செலவிடப்படும் என்று தெரியவருகிறது.

அணுசக்தி குறிப்புகள்

இந்தியாவிற்கு அமெரிக்கா வழங்குமாம்

அணுசக்தி பற்றிய அமெரிக்கக் குழுவின் 6,000 குறிப்புகளையும், 37 நூல்களையும் இந்தியாபோன்ற நாடுகளுக்கு வழங்கப் போவதாக அமெரிக்க தூதுவராலயக் கிளையின் தூதுவர் பம்பாயில் தெரிவித்திருக்கிறார்.

1954 செப்டம்பர் மாதம்வரை மொத்தம் 1528 பள்ளிக்கூடங்கள் ஆதாரப் பள்ளிக்கூடங்களாக மாற்றியமைக்கப்பட்டன.

இந்தி மொழியில் ஒப்பந்தங்கள்!

இந்தியா, வேறு நாடுகளுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் ஆகியவை ஆங்கிலத்துடன் இந்தியிலும் பதிவு செய்யப்படுமாம்.

ஒப்பந்தம் செய்துகொள்ளும் நாட்டின் மொழியிலும் தஸ்தாவேஜுகள் எழுதப்படுமாம்.

இந்த முடிவை ஒட்டி, ஜப்பானுடன் விமானப் போக்கு-வரத்திற்கான ஒப்பந்தம், ஆங்கிலம், இந்தி, ஜப்பானிய மொழிகளில் எழுதப்பட்டதாம்.

இந்தி, ஜப்பான் மொழி வாசகங்களில் பொருள் வேறுபாடு காணப்படுமானால் ஆங்கில மொழி வாசகங்களின்படி நடக்க இரு அரசாங்கங்களும் ஒத்துக்கொள்ளுமாம்.

சீக்கியர் போராட்டம்

தொடர்ந்து நடைபெறுகிறது!

அமிர்தசரஸ், மே 52—

'பஞ்சாபி மொழி பேசும் மக்களுக்குத் தனி மாநிலம் வேண்டும்' என்ற கோஷங்களை ஒலிக்கக் கூடாது என்று இங்கு அண்மையில் பிறப்பிக்கப்பட்டிருந்த 144 தடை உத்தரவை மீறிய குற்றத்திற்காக நேற்று 16 அகாலிகள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இந்தக் கிளர்ச்சி மீண்டும் வலுப்பெற்றுக்கொண்டே வருகிறது. இன்று மீண்டும் 21 அகாலிகள் தடையை மீறுவர்; இத்திங்கள் 15-ந் தேதிவரை தடை மீறல் நடைபெறுமென்றும், தடை மேலும் நீடிக்கப்பட்டால் மற்ற மாவட்டங்களிலிருந்து அகாலி தளத்தவர் வந்து தடையை மீறுவரெனவும் கூறப்படுகிறது.

(நேற்று, இத்தடையை மீறியதற்காக அகாலிதளத் தலைவர் மாஸ்டர் தாராசிங்கும், அவருடன் 15 பேரும் கைது செய்யப்பட்டதும், ஊரடங்குச் சட்டத்தை சர்க்கார் திரும்பப் பெற்றுக்கொள்ளும் வரையிலும், அகாலி தளம் தொடர்ந்து கிளர்ச்சியில் ஈடுபடும் என்று அவர் அறிவித்திருந்ததும் நினைவிருக்கலாம்.)

பாபு ராவ்!

செஷன்ஸ் விசாரணைக்கு அனுப்பப்படுகிறர்

சென்ற சில திங்களுக்கு முன்னர், பிரதமர் நேருவை கொல்ல முயற்சித்ததாகக் கூறப்பட்ட ரிக்ஷாக்காரர் பாபு ராவ் மீது 'செஷன்ஸ்' விசாரணை நடத்துமாறு நாகபுரி முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டிருக்கிறார்.

அவர் தமது உத்தரவில், நேருவை பாபு ராவ் கொலை செய்ய முயன்றதற்கான பூர்வாங்க நிரூபணம் இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

பாபு ராவின் ஒரே சாட்சி!

அவ்வுத்தரவைப் பிறப்பித்த மாஜிஸ்திரேட், 'யாரையாவது உனது தரப்பில் சாட்சியாக விசாரிக்க வேண்டுமென்று விரும்புகிறாயா?' என்று கேட்டபோது, பாபு ராவ், 'நேரு ஒருவரேதான் எனது சாட்சி' என்று கூறினாராம்.

உணர்ந்துள்ளனராம்!

சென்னை, மே 10—

இலங்கை—இந்தியர் நிலைமை பற்றி பிரதமர் நேரு பண்டிதருடன் தாம் விவாதம் நடத்தியதாக அமைச்சர் சுப்பிரமணியம் நிருபர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை—இந்தியர் பிரச்சினை இந்திய சர்க்காருக்குக் கவலை தருவதாகவும், இப்பிரச்சினையின் எல்லா அம்சங்களையும் இந்திய சர்க்கார் நன்றாக உணர்ந்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

கழகக் கூட்டங்கள்

★

அரிமழம்

14—5—55 மாலை 5 மணிக்கு

தலைவர்: கரு. செல்லமுத்து

பேசுபவர்:

ஈ. வெ. கி. சம்பத்

★

சென்னிமலை

குமரன் சதுக்கத்தில்

14—5—55 மாலை 7 மணிக்கு

பேசுபவர்:

என். வி. நடராசன்

★

கோத்தமங்கலம்

தி. மு. கழக ஐந்தாவது ஆண்டு விழா

அழகிரி அரங்கத்தில்

14—5—55 இரவு 7 மணிக்கு

தலைவர்: ஏ. டி. பதி

பேசுவோர்:

காஞ்சி கல்யாணசுந்தரம்
கே. வி. ஏ. இராமமூர்த்தி
கே. அடைக்கலம்
கே. மீரா
எம். எஸ். சிவகுருநாதன்
எம். ஏ. மணி
ஏ. பி. இராசன்

அன்று பகல் 3 மணியளவில் ஊர்வலமும் நடைபெறும்.

★

நச்சலூர்

வ. உ. சி. சதுக்கத்தில்

14—5—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: பூ. சி. போலன்

பேசுவோர்:

எம். எஸ். மணி
மீ சு. இளமுருகு பொற்செல்வி
தீ. வி. முத்துகிருஷ்ணன்

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன் மதுரை வருகை

15—5—55 காலை 9 மணிக்கு புகைவண்டி நிலையத்தில் வரவேற்பு.

காலை 10 மணிக்கு அழகரடி வேலாயுத நினைவுப் படிப்பக ஆண்டு விழா.

மாலை 5 மணிக்கு திடீர்நகரிலிருந்து ஊர்வலம்.

மாலை 6 மணிக்கு கீழச்சந்தைப் பேட்டை வைகையாற்றில், அண்ணாதுரை இலவச படிப்பக ஆண்டு விழாவும், பாராட்டுப் பொதுக்கூட்டமும்.

ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
காஞ்சி கல்யாணசுந்தரம்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
எஸ். முத்து
ஏ. வி. சௌந்தரராசன்

ஆகியோர் பொதுச்செயலாளர் அவர்களைப் பாராட்டி பேசுவர்.

குறிப்பு: தொண்டர்கள், தொண்டர் படை உடையுடன் காலை 7 மணிக்கு, மதுரை நகர் தி. மு. கழகத்திற்கு வந்து சேரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஈ. வெ. கி. சம்பத்

சுற்றுப்பயணம்

மே 13: சிங்கம்புணரி
14: அரிமழம் (புதுக்கோட்டை பகுதி)
15: நாகப்பட்டணம்
16: கீழவாழைக்கரை (திருவாரூர் பகுதி)
17: வைத்தீஸ்வரன்கோவில்
18: ஈரோடு

நீர்வளிக்குண்டு சோதனை

(1-ம பக்கத்தின் தொடர்ச்சி)

என்று, ஜப்பானின் வட கோடித் தீவிலிருக்கும் சாப்ரோ எனுமிடத்தில் உள்ள சுகாதார இலாகா அதிகாரிகள் நம்புவதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த ஏப் 9, 13-ந் தேதிகளுக்கிடையே ஹோக்கைடோ தீவுகளில் விழுந்த கதிரியக்கப் பொடிகளை தங்கள் நம்பிக்கைக்கு ஆதாரமாக்குகின்றனராம்.

என். வி. நடராசன் இலட்சியப் பரணி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள், அன்றைய பிரிட்டிஷ் ஆட்சியிலே நாடு கடத்தப்பட உத்திரவிட்ட சமயத்திலும், மற்றும் நெருக்கடியான காலங்களிலும், ஆங்கிலேயக் கவர்னர்களின் உத்திரவை எதிர்த்து, அடக்குமுறையை மண்கவ்வச் செய்த பெருமையும் அன்றையத் திராவிடத் தலைவர்களுக்கு உண்டு; இச்சம்பவங்களையெல்லாம் நினைவூட்டும் 'சின்ன'மாக இன்று, சென்னை சூளைப் பகுதியிலே தலை நிமிர்ந்து இயங்கி வருவதுதான் சென்னைத் தொழிற் சங்கமாகும்.

"அன்று மட்டுமா? அதற்குப் பின்னரும், தமிழகத்தில் ஏற்பட்ட தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டங்களில் திராவிடர் இயக்கமும், திராவிட முன்னேற்றக் கழகமும் தமது மனப்பூர்வமான ஒத்துழைப்பைத் தந்துள்ளன.

"பக்கிங்காம் கர்னாடிக் மில் வேலை நிறுத்தம், பொன்மலை இரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம், அதற்கு முன்னதாக நடைபெற்ற நாகைத் தொழிலாளர் வேலை நிறுத்தம், மற்றும் சில வேலை நிறுத்தங்கள் ஆகியவைகளிலே 'திராவிடர் இயக்கம் காட்டிக் கொடுத்தது—துரோகம் செய்தது,' என்று நிரூபிக்க, யாருக்காவது துணிவுண்டா என்று அறைகூவி அழைக்கின்றேன். இன்னும் சொல்லவேண்டுமானால், தொழிலாளர் கிளர்ச்சிகளில் திராவிடர் இயக்கம் செய்துள்ள உதவியானது, தொழிலாளரிடத்திலேயிருந்து யாதொரு உதவியோ அல்லது அவர்களைப் பயன்படுத்தி அரசியலில் ஆதிக்கம் பெறலாம் என்ற பேராசையை மனதில் நினைத்தோ அல்ல; ஆகவே, மற்ற எந்தக் கட்சியினரையும்விட தொழிலாளர்களைப்பற்றி—அவர்களது நல்வாழ்வினைப்பற்றிப் பேச அருகதையுடையோர் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்று கூறினால், அது தற்புகழ்ச்சியாகாதென்றே நினைக்கிறேன்.

"அந்நிய ஆட்சியில் தொழிலாளர் இயக்கம் என்றாலோ, அல்லது தொழிலாளர் கிளர்ச்சி என்றாலோ சர்க்காருக்கு மதிப்பும், மருட்சியும் இருந்துவந்தது; வேலை நிறுத்தங்கள் பல வெற்றியும் பெற்றிருக்கின்றன. அவ்வித சக்தி வாய்ந்த தொழிலாளர் இயக்கத்தை நாளடைவில் சிலர், தங்களின் அரசியல் நடவடிக்கைகளுக்காகக் 'கூறு' போட்டனர். தொழிற் சங்கத் துறையிலே போட்டிகளும், பிளவுகளும் தலைவிரித்தாடி தொழிலாளரின் கட்டுக்கோப்பான ஒற்றுமையும் சீர்குலையத் தொடங்கிற்று.

"தொழிலாளர் இயக்கத்தின் சக்தியை தங்களின் அரசியல் காரியங்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டு வீண் தொல்லைகளில் சிக்கவைத்து வேடிக்கை பார்ப்பவர்கள் கம்யூனிஸ்டு கட்சியினராவர். 'ஒரு தொழிற்சாலைக்கு ஒரு சங்கம்' என்றிருந்தால் போதாதா? அச்சங்க நிர்வாகிகள் ஒழுங்காக நடக்கவில்லையெனில், அவர்களை அகற்றிவிட்டு நிர்வாகத்தைப் பிறர் ஏற்கக் கூடாதா? ஆனால், நம் நாட்டில் தொழிற்சங்கத் துறையிலே நாம் காண்பதென்ன? ஒரு தொழிற்சாலையில் தேசியத் தொழிற்சங்கம், கம்யூனிஸ்டு தொழிற்சங்கம், சோஷலிஸ்டு தொழிற்சங்கம், சமதர்ம தொழிற்சங்கம் என்பதாக போட்டிச் சங்க மனப்பான்மை வளர்ந்து வருவதால் தொழிலாளர்களுக்கு நன்மையா? அல்லது இப்படிக் 'கூறு' போடும் கட்சியினருக்கு இலாபமா?—என்பதைப் பாட்டாளி மக்கள் இனியாவது உணரவேண்டும்.

"இப்படி கட்சி 'லேபில்'களை ஒட்டவைத்து தொழிற்சங்கங்களை நடத்துபவர்கள், கட்சி மனப்பான்மையில்லாது தொழிற்சங்க எண்ணத்தோடு அச்சங்கங்களில் சேர்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தினரிடம் நேர்மையுடனு வது நடந்து கொள்கிறார்களா என்றால், அதுதானில்லை. கட்சி மனப்பான்மை கொண்டு, தி. மு. கழக அனுதாபம் கொண்ட தொழிலாளர்களைப் பழிவாங்கவும் முனைகின்றனர்; எனவேதான், தி. மு. கழகம், 'தொழிற்சங்கத் துறையில் இன்று மலிந்துள்ள கட்சி ஆதிக்கம், போட்டி மனப்பான்மை ஒழிந்து ஒரே சங்கமாக இயங்க வேண்டு'மென்று விரும்புகிறது; அதற்கு பிறர் விட்டுக்கொடுக்கவோ அல்லது மன வளமோ பெறவில்லையென்றால், திராவிட முன்னேற்றக் கழக அனுதாபம் கொண்ட தொழிலாளர்களின் உரிமையைப் பாதுகாக்கும் முறையில் தொழிற் சங்கப் பணியில் ஈடுபடவும் எண்ணி ஆவன செய்து வருகிறது; அதற்கான வழிவகைகள், அண்மையில் நடைபெறப்போகும் மாநில மாநாட்டில் வகுக்கப்படும்.

"69 ஆண்டுகளுக்கு முன் மேலைய நாட்டுத் தொழிலாளர்கள், வேலை நேர நிர்ணயத்துக்காகப் போராடினர்; பிறகு கூலிப் பிரச்சினையில் கவலை செலுத்தி வெற்றி பெற்றனர்; இன்று, 'எங்கள் உழைப்பு தனிப்பட்ட நபர்களுக்கு உரிமையாகக் கூடாது; அனைத்தும் சர்க்கார் மூலமாய் மக்களின் சொத்தாக இயங்க வேண்டும்,' என்பதாக—இப்படி படிப்படியாக—தங்கள் உரிமைப் போரில் வெற்றி பெற்று தலைசிறந்த மக்களாக வாழ்கின்றனர்.

"நம் நாட்டிலோ, 1920-ம் ஆண்டில் அந்நியர் ஆட்சியில் கூலி உயர்வுப் போராட்டம்; இன்று 1955-ம் ஆண்டில்—அதுவும் 'சுதந்திரக் குடியரசு' ஆட்சியிலும்—அதே கூலி உயர்வுப் பிரச்சினைக்குப் போராட்டம்! அன்றைய நிலையிலிருந்து தொழிலாளர்கள் அல்லது தொழிற் சங்கக் கொள்கைகள் வளர்ந்திருக்கிறது என்று கூறுவதற்கில்லை. இந்நிலையில், 'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்,' என்று 'வெத்துவேட்டு' கிளப்பி, 'இந்தக் கோஷமே நமது நாள் தொழிலாளர் இயக்கப் பணி' என்று கூறுவதில் அர்த்தமிருக்க முடியுமா?

"உலகில் உள்ள மற்ற தொழிலாளர்கள் எந்த அளவுக்கு உயர்ந்திருக்கின்றனர்?—அந்தந்த நாடுகளின் ஆட்சி முறையின் நிலை என்ன?—அந்தந்த சர்க்காருக்கு உள்ள உரிமைகளென்ன—என்பவைகளைக் கண்டறியாமலும், அதே சமயத்தில் திராவிடத்தின் ஆட்சி முறையும், சென்னை மாநில சர்க்காருக்கு இருக்கும் அதிகாரமும், இந்நாட்டுத் தொழில் வளம், பொருளாதார நிலை என்ன என்பதை புரிந்து கொள்ளாமலும், அல்லது புரிந்துகொண்டே வீண் கூப்பாடு போடுவதும் பித்தலாட்டமல்லவா?

"எனவே, திராவிடத்திலுள்ள தொழிலாளர்கள், கூலி உயர்வுக்கு மட்டுமே தங்களின் சக்தியைச் செலவழிப்பதென்பதில்லாமல், 'எங்களின் உழைப்பு இனி தனி நபரின் ஏகபோக வாழ்வுக்குப் பயன்படுதல் கூடாது—பொது மக்களுக்கு உரிமையாக்கப்பட வேண்டும்,' என்ற உண்மையான உரிமைப் பிரச்சினையில் கவலை செலுத்த வேண்டும். இதனைத்தான் மே தின விழாவில் தி. மு. கழகம் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறது.

"ஒரு நாட்டிலுள்ள தொழிலாளர்கள் ஏறத்தாழ உரிமையுடன் நல்வாழ்வு நடத்த வேண்டுமானால், அந்நாட்டில் தொழில் வளம் பெருகியிருக்க வேண்டும்; தொழில் வளம் பெருகினால்தான் பொருளாதாரமும் உயரும். தொழில் வளம் பெருகுவது மட்டும் போதாது; அப்பொருள்களுக்கு உலக மார்க்கெட்டிலே இடமும் பெறுதல் வேண்டும்; அத்தகு காரியங்களைச் சாதிக்கக்கூடிய பொறுப்பும், சக்தியும் சர்க்காருக்கு இருக்க வேண்டும்.

"இவையனைத்தையும் நடுநிலையிலிருந்து சிந்தித்துப் பார்த்தால், சென்னை மாநில சர்க்கார், இத்தகைய உரிமை கொண்டதாக யிருக்கிறதென்று யாராவது கூற முடியுமா? ஆதலால்தான், தென்னாட்டில், தொழில்கள் வளம் பெறாதது மட்டுமல்ல — ஏற்கனவே இருந்துவரும் தொழிற்சாலைகளும் இந்தியக் குடியரசு ஆட்சியில் மூடப்பட்டுவருகின்றன.

"பிரெஞ்சு ஆதிக்கப் பிடிப்பிலிருந்து விடுபட்டு, வடநாட்டு ஆட்சிப் பிடிப்பில் சிக்கியுள்ள புதுவையில், கடந்த 3 வாரங்களாக மூன்று ஆலைகள் மூடப்பட்டுள்ளன என்றும், அதனால் தொழிலாளர்கள் அவதிக்குள்ளாகியிருக்கின்றனர் என்றும் தெரிகிறது.

"ஆலைகளை மூடிவிட்ட முதலாளிகளோ, 'நாங்கள் தயாரித்துள்ள சரக்குகளுக்கு மார்க்கெட் இல்லாமல் தேங்கிவிட்டன; அதனால் உற்பத்தியை நிறுத்திவிட்டோம்,' என்கின்றனர்; ஆனால், புதுவையில் இன்று தர்பார் நடத்தும் வடநாட்டு ஆதிக்க ஏஜெண்டான கேவல் சிங், நேரு சர்க்கார் கூறும் சமாதானத்தை இங்கே தேன் ஒழுகக் கூறமுடியுமேயன்றி, உடனடியாக, தேங்கியுள்ள சரக்குகளுக்கு 'மார்க்கெட்' தேடித் தரவோ அல்லது ஆலைகளை சர்க்காரே ஏற்று நடத்தவோ என் காரியமாற்றக் கூடாது?

"எனவே தென்னாட்டுத் தொழிலாளர்களின் தேய்ந்து வரும் வாழ்வு மலரவேண்டுமானால், தென்னாட்டிலுள்ள சர்க்கார் அத்தகு உரிமைபெற்ற சர்க்காராகவும் மாறவேண்டும்; டில்லியோ, அமெரிக்காவோ, பிரிட்டனோ, பிரான்சோ, ரஷ்யாவோ தட்டிக் கேட்கும் ஆதிக்க நிலை அழிந்துபட வேண்டும்; இதற்கு இன்றியமையாதது, நாட்டுப் பிரிவினையே யாகும்.

"திராவிடத் தொழிலாளர்களின் வாழ்வு என்றும் நிலைபெற்றதாக இருக்க வேண்டுமாயின், அதற்கு அஸ்திவாரமாக அமைய வேண்டுவது நாட்டுப் பிரிவினையே யாகும். அச்சுதந்திரத்தைப் பெற்ற இரண்டே ஆண்டுகளில் திராவிடமும், திராவிடத்தில் வாழும் மக்களும் தன்மானமுடன் வாழ ஆவன செய்யலாம். இதனைத்தான் இரண்டாண்டுகளுக்கு முன்னதாக நமது அண்ணா அவர்கள் மே தின விழாவில் குறிப்பிட்டார்.

"எனவே, இப்பேர்ப்பட்ட நடைமுறை உண்மைக் கொள்கையை மறுத்து, 'ஏக இந்தியா—அகில உலகம்' என்று குருட்டு வேதாந்தம் பேசுபவர்கள் யாரானாலும் சரி—அவர்கள் வடநாட்டு ஆதிக்கத்திற்கு ஏஜெண்டுகளே யாவார்கள்.

"அண்மையில், நேரு பண்டிதர் கூட, 'தென்னாட்டில்தான் வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறது,' என்று கூறியிருக்கிறார். அக்கருத்தைச் சிந்தித்துப் பார்த்தால், தென்னாட்டுத் தொழிலாளர் வாழ்வு வளம்பெற நாட்டுப் பிரிவினை எவ்வளவு முக்கியமானது என்பது விளங்கும்."

அவர் மேலும், வடநாட்டில் வளர்ந்துவரும் தொழிற்சாலைகளைப்பற்றியும், மற்ற புள்ளி விவரங்களையும் எடுத்துக் காட்டினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.